1968 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டேகால் மணிநேரம் ஆகியிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டிய வினாக்கள் நான்கு இருக்கின்றன, முக்கியமான வினாக்கள். இறுதித் துணை வினாவை திரு. துரைபாண்டியன் அவர்கள் கேட்பார்கள்.

திரு. என். துரைபாண்டியன் : எலக்ட்ரிசிட்டி லோன்ஸ், ஸ்மால் சேவிங்க்ஸ் போன்றவை எல்லாம் ஏழை விவசாயிகளிடமிருந்து தான் வாங்கப்படுகின்றன. கிணற்றுக்கு லோன் வேண்டுமென்று அப்ளிகேஷன் கொடுத்திருப்பவர்கள், பம்ப் செட்ஸ்க்கு லோன் வேண்டுமென்று அப்ளிகேஷன் கொடுத்திருப்பவர்கள், இவர்களை அணுகித்தான் கமிஷனர், அதிகாரிகள் போன்றவர்கள் கடன் வாங்குகிறார்களென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படித் தெரியவந்தால் இனிமேலாவது விவசாயிகளிடமிருந்து லோன் கேளாமல் இருக்க உத்தரவிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: யாரும் கட்டாயப்படுத்தி வசூலிக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் அறிக்கை யாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தள்ளி வைக்கப்பட்ட வினாக்கள். வினா 346.

Government Stenographers

* 346 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government in regard to the revision of scales of pay of State Government Stenographers to be on a par with the Central Government Stenographers; and

(*b*) whether the Stenographers of State Government have any chances of promotion in the Departments?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) இல்லை.

(இ) தமிழ் நாட்டுத் தலைமைச்செயலகப் பணியில் (Madras Secretariat Service) உதவியாளர்கள் பிரிவில் ஏற்படும் ஒவ்வொரு எழு காலி இடங்களில் கடைசிக் காலியிடம், சுருக்கெழுத்தர்கள், தமிழ்த் தட்டெழுத்தர்கள் உட்படத் தட்டெழுத்தர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதன்மூலம் நிரப்பப்படல் வேண்டும். தமிழ் நாட்டு நிலைப்பணியில் (Madras Ministerial Service) சுருக்கெழுத்தர்கள் உட்படத் தட்டெழுத்தர்கள்—உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு வேண்டிய முழுத் தகுதியுடையவர்களாக இருப்பின் அவர்கள் உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற முடியும். ஆனால் அதற்கு விழுக்காடு எதுவும் குறிப்பிடப்படவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, the work of the Stenographers being a highly technical and efficient one and whereas there are no opportunities open to them to come up in their service, is the Hon. Chief Minister aware that so far none have been promoted

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

to a better post? Also, is he aware of the fact that the Stenographers employed in the Central Government offices in the City of Madras are drawing more salary when compared to the Stenographers employed in our State Government offices in the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI: I may tell my hon. Friend that the ratio has not been fixed.

THIRU K. VINAYAKAM: Will the Hon. Chief Minister be pleased to state how many Stenographers went up to a higher cadre?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not have the exact figure.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இருபதாண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டவர்கள் இரண்டு முறை சம்பள விகிதங்களை அரசாங்க ஊழியர்களுக்கு மாற்றியிருக்கிறார்கள். ஏழு முறை அகவிலைப்படி அலவன்ஸ் மாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த சுருக்கெழுத்தாளர்கள் 210 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்குவில்லை, எதையும் மாற்றவில்லை. நிலைமை எப்படியிருக்கிறது என்றால், மத்திய சர்க்காரில் ஹையர் கிரேடு தேர்ச்சிபெற்ற சுருக்கெழுத்தாளர்களின் அடிப்படைச் சம்பளத்தையும் மாற்றுகிறார்கள். ஆனால் மாநில அரசாங்கத்தில் வேலைசெய்யும் சுருக்கெழுத்தாளர்கள் 90 ரூபாய் வாங்குகிறார்கள். கார்ப்பொரேஷனில் கூட அடிப்படை சம்பளமாக 100 ரூபாய் இருக்கிறது. குறைந்த பட்சம் அந்தக் கார்ப்பொரேஷனில் கொடுக்கப்படக் கூடிய சம்பளமாவது அரசாங்க ஸ்டெனோகிராபர்களுக்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவரவர்களே, தமிழ்நாடு செக்ரெடேரியட் அசோஸியேஷன் மூலமாக கனம் உறுப்பினரவர்கள் சொல்லும் கருத்தும், வேண்டுகோளும் பெறப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்தப் பதவிகள் விவகாரத்தில் 'கிளார்க்குகள்' ஆகப் பணியாற்றுபவர்களில் மூன்று பேருக்கு பதவி உயர்வு கொடுத்தால் நான்காவதாக ஸ்டெனோகிராபர்களுக்குக் கொடுக்கிறார்கள், ஒருசில அலுவலகங்களில். இன்னும் சில அலுவலகங்களில் ஐந்து எழுத்தர்களுக்குக் கொடுத்தவுடனே ஆறுவதாக ஸ்டெனோகிராபர்களுக்குக் கொடுக்கிறார்கள். இன்னும் சிலவற்றில், "நீ கிளார்க்காக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் 'அசிஸ்டெண்ட்' பதவி கொடுக்க முடியும்" என்று சொல்லும் நிலையில் இருக்கிறது. அதை மாற்றி எல்லோருக்கும் ஒரே விதமான முறையில் பதவி உயர்வு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதைப்பற்றியும் சர்க்காரிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதாவது,

The typists, steno-typists and Tamil typists have requested that they should be promoted in the ratio of 1 :4, that is out of every five vacancies in the category of Assistants one should be filled up by promotion from among them. This request also is under consideration.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், முந்தியிருந்ததைவிட இப்பொழுது சுருக்கெழுத்தாளர்களை அதிகப்படுத்தியுள்ளதா? ஒரு சில கட்சிகளுக்குச் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுவதும், ஒரு சில கட்சிக் கூட்டங்களுக்கு அனுப்பாமலும் இருக்கும் நிலை இருக்கிறது. அவ்வாறு ஒரு சில கட்சிக் கூட்டங்களுக்கு அனுப்பாமலிருப்பதால் பேசாத பேச்சுக்களைப் பேசியதாகப்போட்டு தவறான எண்ணத்தை உண்டாக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பது முதலமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே எல்லாக் கட்சிகளுலிக்கும் சுருக்கெழுத்தாளர்களை அனுப்ப ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கூட்டங்களுக்குப் போய் குறிப்பெடுக்கிற சுருக்கெழுத்தாளர்களைப் பற்றிய கேள்வி அல்ல இது. இது ஸ்டெனோகிராஃபர்களைப் பற்றிய கேள்வி.

Denaturants

* 347 Q.—THIRU N. KASIRAMAN :
THIRU V. K. KOTHANDARAMAN :
Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have permitted Messrs. E.I.D. Parry Limited, Madras under Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, the use of 1.5 litres of light caoutchoucine to the exclusion of pyridine bases for every 98.5 litres of spirit;

(*b*) the effect of human consumption of Alcohol mixed with Pyridine and Alcohol mixed with Caoutchoucine; and

(*c*) whether Pyridine mixed Alcohol is dangerous or Alcohol mixed caoutchoucine is dangerous?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது குறித்துப் பல முறைகள் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் இதற்குப் பதில் தருகிறேன்.

(அ) ஆம்.

(இ) சாதாரண இயல்பு மாற்றிகள், நீர்த்த காவுட்ஷின், பைரிடின் காரங்கள் ஆகியவை மனிதருக்குத் தீங்கு விளைப்பதில்லை. ஆனால் அவை சாராயத்திற்கு ஒரு வித அருவருப்பான நாற்றத்தை மட்டும் அளிக்கின்றன. எனவே, ஓரளவு காவுட்ஷின் கலந்த சாராயத்தை உட்கொள்வதால் மனிதருக்கு எவ்வித ஊறும் விளையாது.

(உ) இவை இரண்டும் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியவை அல்ல.